*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*21 10 2025 TUESDAY 12.40 PM*
*ஆகாஷ்வாணி*

***தலைப்புச் செய்திகள்***

1. *நாட்டு மக்களின் பாதுகாப்பிற்கு காவல்துறையினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

2. *உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் காவலர்கள் அயராது பணியாற்றி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.*

3. *பீகார் சட்டப்பேரவை இரண்டாம் கட்டத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.*

4. *ஜப்பான் நாட்டின் முதல் பெண் பிரதமராக திருமதி Sanay Takaichi இன்று மாலை பதவியேற்கிறார்.*

5. *எகிப்து சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் இஷிதா Negi காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<<>>>>>*

*நாட்டு மக்களின் பாதுகாப்பிற்காக காவல்துறையினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*காவலர் வீர வணக்க நாளையொட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், காவலர்களின் தீரம் மற்றும் இக்கட்டான தருணங்களில் அவர்கள் மேற்கொண்ட பணி பாராட்டத்தக்கது என்றும் தெரிவித்துள்ளார்.*

*இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் பாதுகாப்புக்காகவும், மக்களின் நலனுக்காகவும் பணியாற்றிவரும் காவல்துறையினரின் அர்ப்பணிப்பு பாராட்டுதலுக்குரியது என்று கூறியுள்ளார்.*

*நாட்டின் பாதுகாப்பிற்காக தீரத்துடன் பணியாற்றும் காவலர்களுக்கு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், குற்றங்களை தடுக்கவும், உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்யவும் காவலர்கள் அயராது பணியாற்றி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*காவல்துறையினர் சிறப்பாக செயல்படும் வகையில், நவீன கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை மத்திய அரசு வழங்கியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*

*காவலர் வீர வணக்க நாளையொட்டி, புதுதில்லி தேசிய காவலர் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தியபின் பேசிய அவர், உறுதியான தேசத்திற்கு காவல்துறை வலுவாக இருக்க வேண்டியது அவசியம் என்று தெரிவித்தார்.*

*மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டிற்காக தன்னலமின்றி சேவையாற்றும் காவலர்களுக்கு தலை வணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இந்நாளையொட்டி, சென்னையில் டிஜிபி அலுவலகத்தில் உள்ள காவலர் நினைவு சின்னத்தில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.*

*<<<<<<>>>>>>*

*பண்டிகை காலங்களில் மக்களின் வசதிக்காக 3 ஆயிரத்து தொள்ளாயிரத்து 60-க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாக ரயில்வே தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த ஒன்றாம் தேதிமுதல், 19-ஆம் தேதிவரை இயக்கப்பட்ட இந்த ரயில்கள் மூலம் ஒரு கோடிக்கும் அதிகமான பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தீபாவளி மற்றும் சத் பூஜைக்காக 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாகவும் ரயில்வேயின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக, விவசாயிகள் பெருமளவு பயனடைந்து வருகின்றனர்.*

*மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உத்தராகண்ட் மாநிலத்தின் 13 மாவட்டங்களில் துவரம் பருப்பு, சிவப்பு அரிசி உள்ளிட்டவைகளை உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகள் இதன்மூலம் பெரிதும் பயனடைந்து வருவதாக கூறப்பட்டுள்ளது.*

*வேளாண்மை மட்டுமின்றி, சுற்றுலா மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்திக்கும் சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு பெரிதும் உதவிகரமாக உள்ளதாகவும், இந்த சீரமைப்பு மூலம் உத்தராகண்ட் மாநிலத்தின் நீடித்த வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டாம் கட்டமாக அடுத்த மாதம் 11-ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.*

*20 மாவட்டங்களில் உள்ள 122 தொகுதிகளில் சுமார் 2 ஆயிரத்து 600-க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.*

*வேட்புமனுக்களை திரும்பப்பெற நாளை மறுநாள் கடைசி நாளாகும்.*

*பீகாரில் இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 6 மற்றும் 11-ஆம் தேதிகளில் நடைபெறும் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 14-ஆம் தேதி எண்ணப்படும்.*

*<<<<<<>>>>>>*

*பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் செய்தித்தாள்களில் தேர்தல் பிரச்சார விளம்பரங்கள் வெளியிடும் முன்பாக ஊடக சான்றிதழ் கண்காணிப்புக்குழுவின் அனுமதி பெற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.*

*இதுதொடர்பாக, அந்த ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், முதல் கட்ட தேர்தலுக்காக நவம்பர் ஐந்து மற்றும் 6-ஆம் தேதிகளிலும், இரண்டாம் கட்டத் தேர்தலுக்காக அடுத்த மாதம் 10 மற்றும் 11-ஆம் தேதிகளிலும் வெளியிடப்பட உள்ள தேர்தல் பிரச்சார விளம்பரங்களுக்கு இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*ஜப்பான் நாட்டின் முதல் பெண் பிரதமராக திருமதி Sanay Takaichi இன்று மாலை பதவியேற்கவுள்ளார்.*

*அந்நாட்டின் LDP கட்சி தலைவர் திருமதி Sanay Takaichi, JIP கட்சியுடன் இணைந்து புதிய அரசை அமைக்க உள்ளார்.*

*இந்த அமைச்சரவையில் Koizumi Shinjiro பாதுகாப்புத்துறை அமைச்சராகவும், Motegi வெளியுறவுத்துறை அமைச்சராகவும், Katayama Satsuki நிதியமைச்சராகவும் பதவியேற்க உள்ளனர்.*

இந்த புதிய அரசு பொருளாதார சீர்திருத்தம், தேசிய பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் வெளியுறவுக் கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

ஜப்பான் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி *Sanay Takaichi*-க்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியா – ஜப்பான் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், இணைந்து பணியாற்ற எதிர்நோக்கி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

யுக்ரைன் தொடர்பாக புடபெஸ்டில் அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டின் இடையே நடைபெறுவதாக உள்ள உச்சிமாநாட்டில், தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அதில் கலந்துகொள்ளவிருப்பதாக யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் தொடர்பாக, ரஷ்யாவின் கோரிக்கைகளை ஏற்க வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தம் தருவதாக எழுந்த சர்ச்சைக்குரிய கருத்துக்களுக்கு இடையே ஜெலன்ஸ்கியின் அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்யா, யுக்ரைனில் உள்ள டோன்பாஸ் பகுதியை தங்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்று அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த தலைவர்கள் இந்த உச்சிமாநாடு தொடர்பாக கடுமையான விமர்சனத்தை எழுப்பியுள்ளனர்.

பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரான், ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவுத்கொள்கை தலைவர் காஸா கல்லாஸ் ஆகியோர் யுக்ரைன் உடனான அமைதி பேச்சுவார்த்தையில், யுக்ரைனுடன் கூட்டணியில் உள்ள நாடுகள் பங்கேற்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

<<<<<<>>>>>>

பஞ்சாபில் உளவுத்துறை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் இரண்டு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் பாகிஸ்தானின் ஐ எஸ் ஐ அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் பஞ்சாப் மாநில டிஜிபி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாகுவின் பிறந்தநாளையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்ட இஸ்ரேல் பிரதமருக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இஸ்ரேல் – இந்தியா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு வரும் காலங்களில் மேலும் வலுப்பெறும் என்று எதிர்பார்ப்பதாக அவர் தமது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

*<<<<<<>>>>>>*

*வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக அடுத்த நான்கு நாட்களுக்கு தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.*

*குறிப்பாக, தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், ராமநாதபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கனமுதல், மிக கனமழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், மாவட்டங்களிலும், கன்னியாகுமரி, திருநெல்வேலியிலும் வரும் 24-ஆம் தேதிவரை கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*கடந்த 24 மணிநேரத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முதல் ஆங்காங்கே கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர்கள் கூறுகின்றனர்.*

*<<<<<<>>>>>>*

*எகிப்து சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் இஷிதா Negi காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-9, 21-11 என்ற செட் கணக்கில். எகிப்தின் Karma Elghandour -ஐ வென்றார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவில் Mayank Bharadwaj காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 21-15 என்ற செட் கணக்கில், எகிப்தின் Mohammed-ஐ வென்றார்.*

-----------

உலக *Kung Fu* சாம்பியன் போட்டியில் இந்தியா ஐந்து வெள்ளி, *14* வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவில் நடைபெற்ற இப்போட்டியில், *Resina, Srivarshan, Messi, Kamal Kumar Boro* வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

---------

பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை முதல் ஐந்து இடங்களுக்கு முன்னேறியுள்ளது.

-------------

ஃபிரெஞ்ச் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

<<<<<<>>>>>>